2006 செப்டம்பர் 1]

முற்பகல் 10–10

(ஆ) சத்துணவு மைய மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஊதிய விகித நிர்ணயம்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இந்த நெருக்கடியையும் தாங்கிக்கொண்டு இன்னொரு அறிக்கையை இந்த அவைக்கு அளிக்கின்றேன். சத்துணவு மையங்களிலும், அங்கன்வாடிகளிலும் பணியாற்றுவோர் ஊதிய உயர்வு உள்ளிட்ட சில கோரிக்கைகளை நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றார்கள்.

அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள் போன்ற அனைத்துத் தரப்பினருக்கும், இயன்றவரையில் அவர்கள் மனம் குளிரப் பல்வேறு சலுகைகளைத் தொடர்ந்து வழங்கி வரும் இந்த அரசு, இப்பொழுது நிதிஆதாரப் பற்றாக்குறை இருந்தபோதிலும், சத்துணவுத் திட்டம் மற்றும் அங்கன்வாடிகளிலே பணியாற்றுவோரின் கோரிக்கையை அலட்சியப்படுத்த விரும்பாத நிலையில், அவர்களுக்கு இயன்றவரையில் ஆவன செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு, இப்போது அவர்கள் பெற்று வரும் பயன்களோடு மேலும் ஓரளவு பயன் பெற வேண்டும் என்ற வகையில் பின்வரும் அறிவிப்புகளைப் பரிவோடு வெளியிடுகின்றது:

சத்துணவுத் திட்ட அமைப்பாளர்களும், அங்கன்வாடிப் பணியாளர்களும் தற்போது ஒவ்வொரு மாதமும் ஊதியமாக 2,158 ரூபாய் பெறுகின்றார்கள். இவர்களுக்கு இனிமேல் ரூபாய் 1,300–20–1,500–25–2,000 என்ற ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்படும். இதன் காரணமாக, இதுவரை ரூபாய் 2,158 மட்டுமே மொத்த ஊதியமாகப் பெற்று வந்தவர்கள், இனிமேல் ரூபாய் 260 கூடுதலாகப் பெற்று, மொத்தம் 2,418 ரூபாய் ஊதியமாகப் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர்களும், அங்கன்வாடிகளில் பணியாற்றும் முதல் நிலை அங்கன்வாடி உதவியாளர்களும் தற்போது ஒட்டுமொத்த ஊதியமாக மாதம் ரூபாய் 1,180 பெறுகின்றார்கள். இத்துடன் மேலும் ரூபாய் 120 சேர்த்து, மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,300 வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையல் உதவியாளர்களும், அங்கன்வாடிகளில் பணியாற்றும் இரண்டாம் நிலை

உதவியாளர்களும் தற்போது ஒட்டுமொத்த ஊதியமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 890 பெறுகின்றார்கள். இத்துடன் மேலும் ரூபாய் 110 சேர்த்து, மாதம் ஒன்றுக்கு அவர்களுக்கு 1,000 ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அறிவிப்பு காரணமாக, 88,070 சத்துணவு அமைப்பாளர்களும், அங்கன்வாடி அமைப்பாளர்களும், 82,324 சத்துணவு மைய சமையலர்களும், அங்கன்வாடி மைய முதல் நிலை உதவியாளர்களும், 41,344 சமையல் உதவியாளர்களும், 4,426 அங்கன்வாடி மைய இரண்டாம் நிலை உதவியாளர்களும், ஆக மொத்தம் 2,16,164 பணியாளர்கள் பயனடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனால், ஆண்டு ஒன்றுக்கு இந்த அறிவிப்பின் காரணமாக, ஒட்டுமொத்தமாகக் கூடுதலாக 45.41 கோடி ரூபாய் செலவாகும். இந்த ஊதிய உயர்வுகள் 1–9–2006 முதல் நடைமுறைக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அறிவிப்புகள்

(அ) மானியக் கோரிக்கைகள் மீதான கடைசி நாள் விவாதத்தை பிற்பகல் 1–30 மணிக்கு முடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்புக்கு ஒதுக்கப்பட்ட நாட்களில் இன்று கடைசி நாள். பேரவை விதி 185 (3)-ன்படி மானியக் கோரிக்கைகள் மீது விவாதிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நாட்களில் கடைசி நாளன்று மானியக் கோரிக்கைகள் சம்பந்தமான விவாதம் மற்றும் பதிலுரை உட்பட அனைத்தையும் சரியாகப் பிற்பகல் 1–30 மணிக்கு முடிவுறச் செய்து, உடனடி வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும். அதாவது, இன்று பிற்பகல் 1–30 மணிக்கு கில்லட்டின் நேரம். எனவே, உறுப்பினர்கள் தங்களது பேச்சினைச் சுருக்கமாக முடித்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடு).

4. தகவல் கோரல்

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் மின்சார வாரியத்தின் இழப்புகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.